## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி

## அ.வ.எண். 5/2019

இந்நீதிமன்றத்து எழுத்தர் திருமதி B. கௌசல்யா அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பு 1ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2025 ஆண்டு ஜுலை மாதம் 18 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : தாமோதரன் | மதம் | : |
| த/பெ | : பெருமாள் நாயுடு | ஜாதி | : |
| வயது | : 75 | கிராமம் | : சென்னை |
| தொழில் | : விவசாயம் | வட்டம் | : சென்னை |

**18.07.2025**

**வா.சா. 1 ன் முதல் விசாரணை**

1. நான் இவ்வழக்கில் வாதி தரப்பு 1ம் சாட்சியாக சாட்சியம் அளிக்கிறேன். என் தரப்பில் பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். எனது பிரமாண வாக்குமூலத்தை நான் சொல்லித்தான் என்னுடைய வழக்கறிஞர் பிரமாண வாக்குமூலத்தை தயார் செய்தார். அதில் உள்ள விவரங்கள் எனக்கு நன்குத் தெரியும். பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். 09.04.2007ம் தேதியிட்டு நீலமேகன் என்பவருக்கு கணேச ரெட்டி எழுதி கொடுத்த தான செட்டில்மெண்ட் ஆவணம் சார்பதிவாளர் நகல் தாக்கல் செய்கிறேன். **(தான செட்டில்மெண்ட் ஆவணம் வா.சா.ஆ1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

2. 03.05.2007ம் தேதியிட்டு நீலமேகன் என்பவருக்கு கணேச ரெட்டி எழுதி கொடுத்த தான செட்டில்மெண்ட் ரத்து ஆவணம் சார்பதிவாளர் நகல் தாக்கல் செய்கிறேன். **(தான செட்டில்மெண்ட் ரத்து ஆவணம் வா.சா.ஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** 03.05.2007ம் தேதியிட்டு நீலமேகன் என்பவருக்கு கணேச ரெட்டி எழுதி கொடுத்த தான செட்டில்மெண்ட் ஆவணம் சார்பதிவாளர் நகல் தாக்கல் செய்கிறேன். **(தான செட்டில்மெண்ட் ஆவணம் வா.சா.ஆ 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** 10.03.2008ம் தேதியிட்டு கணேச ரெட்டியார் வகையறா வாதி கௌதமிக்கு எழுதி கொடுத்த கிரைய ஆவணம் சார்பதிவாளர் நகல் தாக்கல்

செய்கிறேன். **(கிரைய ஆவணம் வா.சா.ஆ 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** பட்டா எண்.1489 வாதி பெயருக்குள்ள பட்டா தாக்கல் செய்கிறேன். **(பட்டா வா.சா.ஆ 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** 01.01.2007 முதல் 21.07.2013 வரையிலான வில்லங்க சான்று சார்பதிவாளர் நகல் தாக்கல் செய்கிறேன். **(வில்லங்க சான்று வா.சா.ஆ 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

3. 16.09.2010ம் தேதியிட்டு பாபு என்பவருக்கு மாணிக்கம் எழுதி கொடுத்த தான செட்டில்மெண்ட் ஆவணம் சான்றிட்ட நகல் தாக்கல் செய்கிறேன். **(தான செட்டில்மெண்ட் ஆவணம் வா.சா.ஆ 7 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** 16.09.2010ம் தேதியிட்டு துளசிராமன் என்பவருக்கு மாணிக்கம் எழுதி கொடுத்த தான செட்டில்மெண்ட் ஆவணம் சான்றிட்ட நகல் தாக்கல் செய்கிறேன். **(தான செட்டில்மெண்ட் ஆவணம் வா.சா.ஆ 8 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** 10.08.2010ம் தேதியிட்டு டில்லி என்பவருக்கு ராமமூர்த்தி எழுதி கொடுத்த தான செட்டில்மெண்ட் ஆவணம் சான்றிட்ட நகல் தாக்கல் செய்கிறேன். **(தான செட்டில்மெண்ட் ஆவணம் வா.சா.ஆ 9 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** 11.07.2018ம் தேதியிட்ட பொது அதிகார ஆவணம் இணையவழி நகல் தாக்கல் செய்கிறேன். **(பொது அதிகார ஆவணம் வா.சா.ஆ 10 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

(முதல் விசாரணை தொடர்ச்சி ஆவணங்கள் குறியீடு செய்ய வேண்டி வழக்கறிஞர் வேண்டுகோளின்படி ஒத்திவைக்கப்படுகிறது)